www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுத் தேர்வு - 2023

8 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 16 X 1 = 16

1. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ........................
   அ) எடுத்துக்காட்டு உவமையணி ஆ) தற்குறிப்பேற்ற அணி இ) உவமையணி ஈ) உருவக அணி
2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ................. .
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
3. பறவைகள் ...................... பறந்து செல்கின்றன.
   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
4. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற .................. காரணமாக அமைந்தது.
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
5. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
   அ) பருத்திஎல்லாம் ஆ) பருத்தியெல்லாம் இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம்
6. மாடு வயலில் புல்லை மேய்ந்தது - இத்தொடரிலுள்ள வினைமுற்று .................... .
   அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது
7. செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது .................
   அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு
8. காந்தியடிகள் ................ போற்ற வாழ்ந்தார்.
   அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்
9. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு .................... பயன்படுத்தினர்.
   அ) தாவரங்களை ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை
10. என் நண்பர் பெரும் புலவராக இருந்த போதும் .................. இன்றி வாழ்ந்தார்.
    அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி
11. இன்றைய கல்வி ................. நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
    அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்
12. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ................ ஆகும்.
    அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை
13. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ..................... .
    அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த
14. "கலனல்லால்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
    அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால் இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்
15. 'வழாஅமை' பொருள் கூறுக.
    அ) தவறாமை ஆ) கலவை இ) வானம் ஈ) வழக்கம்
16. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ................. .
    அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

**ஆ. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 X 1 = 4

17. பால் ...................... (குடி / பருகு)
18. சோறு .................... (தின் / உண்)
19. பூ ............... (கொய் / பறி)
20. கோழி ..................... (கூவும் / கொக்கரிக்கும்)

**இ. அடிமாறாமல் எழுதுக.** 3 + 3 + 2 + 2 = 10

21. "போர்தற்க" எனத் தொடங்கும் நீலகேசி பாடலை அடிமாறாமல் எழுதுக.
22. 'படும்' என முடியும் குறளை அடிமாறாமல் எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

23. "ஓடை ஆட" எனத் தொடங்கும் வாணிதாசன் பாடலை அடிமாறாமல் எழுதுக.
24. 'கணைகொடிது' என தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.

**ஈ. எவையேனும் ஒன்பது வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.** 9 X 2 = 18

25. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
26. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?
27. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
28. மெய் எழுத்துக்கள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
29. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
30. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
31. வியங்கோள் வினை முற்று விகுதிகள் யாவை?
32. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
23. கொல்லி மலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?
34. உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
அ) வேலியே பயிரை மேய்ந்தது போல. ஆ) உடலும் உயிரும் போல.
35. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
36. கலைச்சொல் தருக. அ) Herbs ஆ) Reform

**உ. எவையேனும் நான்கனுக்கு மட்டும் ஓரிரு வரிகளில் விடையளி.** 3 X 5 = 15

37. கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




1) எந்த நாளை முன்னிட்டு புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2) புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3) புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
4) புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
5) புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

38. தெரிநிலை வினையச்சத்தை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
39. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
40. **என் பொறுப்புகள் :**
நீர்நிலைகளைத் தூய்மையாக வைக்க உதவுவேன் - இவை போன்ற உன் பொறுப்புகள் நான்கினை எழுதுக.
41. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

**ஊ. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளி.** 3 X 7 = 21

42. வெட்டுக்கிளியும் சருகு மானும் கதையை சுருக்கி எழுதுக.
43. காப்பியக் கல்வி குறித்து திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
44. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.
45. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
46. வட்டத்திலுள்ள பழமொழிகளைக் கண்டுபிடித்து எழுதுக.




**எ. கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.** 1 X 8 = 8

47. ஈட்டி எறிதல் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனை பாராட்டி கடிதம் ஒன்று எழுதுக. *(அல்லது)*
48. நான் விரும்பும் கவிஞர் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**ஏ. பின்வரும் சிந்தனை வினைவிற்கு நன்கு சிந்தித்து விடை எழுதுக.** 1 X 8 = 8

49. நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை? *(அல்லது)*
50. கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com